நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுவதற்குக் காரணமாக இருந்த மத்திய அரசுக்கு இந்த மாமன்றத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு உரையாற்றிய அத்தனை பேருக்கும் என்னுடைய இதயமார்ந்த வணக்கத்தை, வாழ்த்துகளை வெளியிட்டு, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின் கருத்துகள் எனக்கும் ஏற்புடையது என்று எனது ஆதரவுக் கருத்தினை இந்த அவையில் பதிய விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.
மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

3. அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஏழாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். (குறுக்கீடு)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக இருந்த Call Attention-களை நேரம் போதாததால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) Zero Hour-ல் என்ன சொல்லுங்கள்.

2008 நவம்பர் 12]

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து நாட்களுக்கு முன்னாலே தமிழ்நாட்டில் நாள்தோறும் நிலவிவரும் மின்வெட்டைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த Subject என்று சொல்லுங்கள், எப்போது எடுக்கலாம் என்று நான் சொல்கிறேன். (குறுக்கீடு) விளக்கமாக ஒரு மணி நேரம் பேசிவிட்டு திரும்ப அதைப் பற்றிப் பேசக் கூடாது. (குறுக்கீடு)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மின்சாரம் சம்பந்தப்பட்டதுதானே? நாளைக்கு எடுத்துக்கொள்வோம். உட்காருங்கள். (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருக்கிறேன். எம்.ஜி.ஆர் சிலை உடைக்கப்பட்டது குறித்து நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வெட்டு கடுமையான ஒரு பிரச்சினை. ஆகவே, அதுவும் ரொம்ப serious-ஆக விவாதிக்கப்பட வேண்டியது. அந்தத் தீர்மானத்தை இன்றைக்கே நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துவிட்டேன் அல்லவா? உட்காருங்கள். நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) வேறு யார்?

திரு. சி. சண்முகவேலு: Hon. Speaker Sir, ஒத்திவைப்புத் தீர்மானம். (குறுக்கீடு) உடுமலை தாலுகா... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுக்கிறோம். (குறுக்கீடுகள்) அதுதான் சொல்லிவிட்டேன் அல்லவா? என்னவென்று கேட்கச் சொன்னீர்கள். கேட்டேன். நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியாயிற்று. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அனைவரும் அவையைவிட்டு வெளியேறினர்.)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் மற்ற கட்சித் தலைவர்களுக்கும் ஆட்சேபனை இல்லையென்றால், உணவைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் எவ்வளவு நேரம் இதைப் பற்றி விவாதித்தாலும், மின்சாரப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தாங்கள் அனுமதித்தால், தலைவர்கள் பேசினால், அதற்குப் பதில் சொல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்கோட்டையன், நாளைக்கு எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னதற்குப் பிறகும் திரும்ப அதை ஏன் நீங்கள் பெரிய issue-ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள்?*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு உணவைப் பற்றிக் கவலையில்லை. இன்றைக்கு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று அமைச்சர் சொல்கிறார். ஆகவே நீங்கள் எடுத்துக்கொள்வதற்கு அனுமதியளிக்காத காரணத்தால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கோஷமிட்டுக்கொண்டு வெளிநடப்புச் செய்தனர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையைவிட்டு வெளியேறினர்.)

பிற்பகல் 1-10

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ*

TRUTH ALONE TRIUMPHS